**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.1447/2024 நாள்-06.10.2025

**வா.சா.1-அருண்மொழி**

**<u>வா.சா.1-ன் குறுக்குவிசாரணை பிரதிவாதி தரப்பில்</u>**

பிரதிவாதி கடந்த 28.02.2019 ம் தேதி தொழில் கடனாக ரூ4,50,000/-பெற்றார் என்றால் சரிதான். தொழில் கடனை பிரதிவாதி மாதத்தவணையை செலுத்தி வந்தார் என்றால் அனைத்து மாதத்தவணைகளையும் முறையாக செலுத்தவில்லை. பிரதிவாதி எத்தனை மாதத்தவணைகள் செலுத்தினார் என்றும் எத்தனை மாதத்தவணைகைள் செலுத்தவில்லைஎன்று குறிப்பிட்டு கூறவில்லை எ ன்றால் சரிதான். பிரதிவாதி மாதத்தவணையாக ரூ11,000/- வீதம் 2020 பிப்ரவரி மாதம் வரை 12 தவணைகள் செலுத்தியுள்ளார் என்றால் ஆவணங்களை பார்த்து தான் கூறமுடியும். மேற்படி விவரங்களை மறைத்து இந்த வழகது தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு எதிராக வாராக்கடன் எப்போது அறிவிக்கப்பட்டது என்று வழக்குரையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். வாராக்கடன் எப்போது அறிவிக்கப்படும் என்றால் மாதத்தவணை 90 நாட்கள் தொடர்ந்து கட்டாவிடின் 91 வது நாள் வாராக்கடன் என்று அறி விக்கப்படும். அந்த விவரத்தை பிரதிவாதியின் வரவு செலவு கணக்கை பார்த்தால் தான் கூறமுடியும். நான் என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் கூறியது போன்று 25.02.2021, 01.02.2022 ஆகிய தேதிகளில் பிரதிவாதி வங்கிக்கு செலுத்த வேண்டிய கடனை ஒப்புக்கொண்டு கடன் ஒப்பந்த கால நீடிக்கும் கடிதம் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் கடன் ஒப்புகை சீட்டு எழுதிக் கொள்ளாததால் தாவா வழக்கு காலவதி தோஷத்தால் பாதிப்படைந்துள்ளது என்றும், பிரதிவாதி கடன் ஒப்புகை சீட்டு

எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய வழககு தாக்கல் செய்ய வழக்கில் வழக்குமூலம் இல்லை என்றால் சரியல்ல. என் வழக்கில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறானது என்றும் வழக்குமூலம் தவறானது என்றால் சரியல்ல. என் வழக்கானது தவறானது என்றும் சட்டப்படி தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.